DINA MALAR

18 SEP 2021

PAGE 4

# சமுதாய கல்லூரியில் மாணவர் சேர்க்கை கால அவகாசம் 30ம் தேதி வரை நீட்டிப்பு

**புதுச்சேரி, செப். 18–**

புதுச்சேரி பல்கலைக் கழகச் சமுதாயக் கல்லுாரியில் மாணவர் சேர்க்கைக்கான கால அவகாசம் வரும் 30ம்தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி பல்கலைக் கழக சமுதாய கல்லுாரி முதல்வர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு;

லாஸ்பேட்டையில் உள்ள புதுச்சேரி பல்கலைக் கழகச் சமுதாயக் கல்லுாரியில் 2021–22ம் கல்வி ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை இணைய வழி மூலம் நடக்கிறது.

மாணவர் சேர்க்கைக்கான கால அவகாசம் இம்மாதம் 30ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்காதவர்கள் http://pucc.edu.in/ என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம்.

இக் கல்லுாரியில் இளங்கலை கணினி பயன்பாடுகள், வணிக நிர்வாகம், உயிர் வேதியியல், ஊடகவியல், வணிகவியல், இளங்கலை மருத்துவத் தொழில் நுட்பப்படிப்புகளான இருதய பரிசோதனை தொழில் நுட்பம், கதிர்வீச்சு மற்றும் நிழற்பட தொழில் நுட்பம், கண் பார்வை தொடர்பான மருத்துவத் தொழில் நுட்பம், சுற்றுலா மற்றும் சேவைத் தொழில் நுட்பம், கணினி மென்பொருள்மேம்பாட்டுத் தொழில் நுட்பம் போன்ற படிப்புகள் உள்ளன.

மருத்துவ ஆய்வகத் தொழில் நுட்பம், சுகாதார ஆய்வாளர், பத்திர எழுத்தர், யோகா மற்றும் இந்த ஆண்டு முதல் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள நாடகம் மற்றும் அரங்கக் கலைகள், கர்நாடக இசை (பாட்டு), பரதநாட்டியக் கலை போன்ற பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளும் தேர்ந்த வல்லுநர்களால் கற்றுக்கொடுக்கப்படுகின்றன.

இளங்கலைப் பட்டப் படிப்புகள், பட்டயப் படிப்புகள் மற்றும் சான்றிதழ் படிப்புகளில் சேர பிளஸ் 2 தேர்ச்சியும், முதுநிலைப் பட்டயப் படிப்பில் சேர இளங்கலை பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மேலும், விவரங்களுக்கு பல்கலைக்கழக சமுதாயக் கல்லுாரியில் செயல்படும் மாணவர் சேர்க்கை உதவி மையங்களை நேரடியாகவோ, அல்லது http://pucc.edu.in என்ற இணையவழியாகவோ தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.